சேத்தியாத்தோப்பு, மருதாநதி ஆகிய பகுதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. முதற்கட்டமாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தோவாளை—புத்தனாறு கால்வாய்கள் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன—காரணம் அவை கோதை யாறு பாசனத்தின் கீழ் வருவதால். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 9–50)

உணவு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்கள்.

222—(*வினா எண். 925) திரு. வே. பெரியசாமி : மாண்பு மிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

அனைத்து உணவு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக்கு ரூபாய் 150-ம், இதரச் செலவுக்கு ரூபாய் 10-ம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அனைத்து உணவு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக்கு ரூபாய் 150-ம் இதரச் செலவுக்கு ரூ. 5-ம் வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட நலத்துறை மூலமாக வும், மலைவாழ் மக்கள் நலத் துறை மூலமாகவும் உண்டு உறைவிடப் பள்ளிகளும், அரசினர் மாணவ மாணவியர் விடுதி களும் நடத்தப்பட்டு வருவது தங்களுக்குத் தெரியும். இந்த விடுதிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு உணவிற்காக மாதம் ஒன்றுக்கு தற்போது ரூ. 85 கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இது சற்றுக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் இன்றைக்கு, உள்ள விலைவாசிக்கு ஒப்ப ரூ. 150 உணவுச் செலவுக்காகவும் இதரச் செலவுக்காக சோப்பு, சீப்பு, எண்ணெய் போன்ற வைகளுக்கு ரூ. 2 கொடுத்துக் கொண்டு வருவது மிகவும் குறை வாக இருக்கின்ற காரணத்தால் குறைந்தபட்சம் 10 ரூபாயாக அதை உயர்த்தி இந்த மாணவர்களின் நலன் மேம்பாடு அடைய இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது ரூ. 85 உணவுக்காகவும், ரூ. 2 இதரச் செலவுக்காகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இப்போது இருக்கின்ற நிதிநிலையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இதரச் செலவுக்காக ரூ. 5-ம், உணவுக்காக ரூ. 150-ம் கொடுக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதற்கு மேல் அரசு மேற்கொண்டு தொகை கொடுக்க முடியாத நிலையும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏழைகளின் பால் நல்ல கருத்துக்களையும், எண்ணங்களையும் கொண்டு இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே கருணை உள்ளம் கொண்டு முதல்வர் அவர்களிடத்தில் சொல்லி ஏழை, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களினுடைய நலனை மனதிலே கொண்டு இந்த அரசு அதிகமான தொகையினை, நான் கேட்ட தொகையினை மாணவர்களுக்கு வழங்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்று இருக்கின்ற நிதிநிலையின் சூழ்நிலையின் காரணமாக இதற்கு மேற்கொண்டு பணம் கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மங்கநல்லூர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள்.

223—(*வினா எண். 553) திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மங்கநல்லூர் அரசு மருத்துவமனைக்குப் போதுமான மருத்துவர்கள் இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டம் அரசு மருத்துவமனையில் இப்போது 2 மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றார்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குத்தாலம் தொகுதியிலுள்ள மங்கநல்லூர் அரசு மருந்தகம் தற்போது ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்